அருட்பெருஞ்ஜோதி அருட்பெருஞ்ஜோதி
தனிப்பெருங்கருணை அருட்பெருஞ்ஜோதி

# வள்ளலார் சன்மார்க்க ஞானமுரசு

விளம்பி ஆண்டு வைகாசி - ஆனி ஜூன் 2018 முரசு 11 ஒலி 132



பிரதி ஒன்றுக்கு ரூ. 10/- ஆண்டு சந்தா ரூ. 120/-

அருட்பெருஞ்ஜோதி அருட்பெருஞ்ஜோதி தனிப்பெருங்கருணை அருட்பெருஞ்ஜோதி

**வள்ளல் பெருமானார் அருளிய சுத்த சன்மார்க்கக் கொள்கைகள்**
**மற்றும் வாழ்வியல் நெறிமுறைகளை அறிய...**

ஜூலை
07 & 08
2018
சனி &
ஞாயிறு



# சன்மார்க்க வாழ்வியல் பயிற்சி முகாம்

உலகுயிர்த் திரளெலாம் ஒளிநெறி பெற்றிட
இலகும் ஐந்தொழிலையும் யான் செயத்தந்தனை - அகவல்

**இடம்: வள்ளலார் சன்மார்க்க சங்கம்,**
வாயு லிங்கம் எதிரில், கிரிவலப்பாதை, திருவண்ணாமலை.

**இப்பயிற்சி முகாமில்:-**

- சன்மார்க்க ஞான சத்சங்கம்
- ஜீவகாருண்ய ஒழுக்க நெறிமுறைகள்
- ஜோதி தியானம்
- ஞான மூலிகை ரகசியங்கள்
- ஜோதி வழிபாடு
- திருவருட்பா பாராயணம்

**போன்றவை நடைபெறும்.**

**சைவ உணவாளர்களுக்கு மட்டுமே அனுமதி**

1. அன்பர்கள் ஜூலை 06 வெள்ளி இரவிற்க்குள் வந்துவிட வேண்டும்.
2. யோகாசனம் செய்வதற்கும், படுப்பதற்கும் இரண்டு பெட்ஷீட் எடுத்துவரவும்.
3. ஆண்கள்: T.ஷர்ட், ஷார்ட்ஸ் பெண்கள்: சுடிதார் போன்ற ஆடைகளை எடுத்துவரவும்.
4. குறிப்பு எடுக்க நோட்டு, பேனா மற்றும் தண்ணீர் பாட்டில் எடுத்துவரவும்.

**பயிற்சிக்கு கட்டணம் இல்லை. குரு தக்ஷணை ஏற்றுக்கொள்ளப்படும்**

**முன்பதிவிற்கு: 88385 40176, 99427 76351**



# திருச்செவிக்கு விண்ணப்பம்

திருஅருட்பா பக்திப் பாமாலை

## திருப்பள்ளி எழுச்சி

பொழுது விடிந்தது; என்உள்ளமென் கமலம் பூத்தது;
பொன்னொளி பொங்கியது எங்கும்;
தொழுது நிற்கின்றனன்; செய்பணி எல்லாம்
சொல்லுதல் வேண்டும் என்வல்ல சற்குருவே;
முழுதும் ஆனான்என; ஆகமவேத முறைகளெலாம்
மொழிகின்ற முன்னவனே;
எழுதுதல் அரியசீர் அருட்பெருஞ்ஜோதி!
என்தந்தையே பள்ளி எழுந்தருள்வாயே.

## திருவருள் முறையீடு

உடையாய் என்விண்ணப்பம் ஒன்று உண்டு; கேட்டு அருள்;
உன்அடிச்சீர் தடையாதும் இன்றிப் புகல்வதல்லால்; இச்சகத்திடைநான்;
நடையால் சிறுமை கொண்டு; அந்தோ பிறரை நவின்று; அவர்பால்
அடையாமையும்; நெஞ்சு உடையாமையும்; தந்து அருளுகவே.


## அம்மைத் திருப்பதிகம்

பொய்யாத மொழியும்; மயல் செய்யாத செயலும்;
வீண்போகாத நாளும்; விடயம் புரியாத மனமும்;
உட்பிரியாத சாந்தமும்; புந்தி தளராத நிலையும்;
எய்யாத வாழ்வும்; வேறெண்ணாத நிறைவும்;
நினை என்றும் மறவாத நெறியும்;
இறவாத தகவும்; மேற்பிறவாத கதியும்;
இவ்ஏழையேற்கு அருள்செய் கண்டாய்;
கொய்யாது குவியாது குமையாது மணம்வீசு
கோமளத் தெய்வ மலரே;
கோவாத முத்தமே குறையாத மதியமே
கோடாத மணிவிளக்கே;
ஐயாநனம் கொண்ட தில்லையம்பதி மருவும்
அண்ணலார் மகிழும் மணியே;
அகிலாண்டமும் சராசரமும் ஈன்றருள்
பரசிவானந்த வல்லி உமையே!

திருச்சிற்றம்பலம்



# அறிவே செல்வம்



**கு**ரு ஒருவரை சந்திக்க பத்து அறிஞர்கள் வந்திருந்தனர். அவர்களில் ஒருவர் குருவிடம் "நாங்கள் உங்களிடம் ஒரேவொரு கேள்விதான் கேட்க உள்ளோம். எங்கள் பத்து பேருக்கும் தனித்தனியே உங்களால் பதில் தர முடியுமா?" என்று கேட்டார்.

அதற்கு குரு "என்ன கேள்வி? தாராளமாக கேளுங்கள்" என்றார்.

"**செல்வம், அறிவு** இரண்டில் எது சிறந்தது? ஏன்? என்பதுதான் எங்கள் கேள்வி" என்றார் அறிஞர்களுள் ஒருவர்.

**முதலாமவரைப் பார்த்து குரு,** "செல்வம் உள்ளத்தின் ஒளியைப் போக்கி அதை இருளடையச் செய்கிறது. விரிந்த மனப்பான்மையைக் குறுகலாக்குகிறது. ஆனால், அறிவோ இருண்ட உள்ளத்தில் ஒளியை பாய்ச்சி அதை விசாலப்படுத்துகிறது. ஆகவே அறிவுதான் சிறந்தது. மேலும், இதை நம் வள்ளல் பெருமானாரும் தமது திருஅருட்பாவில்,

**அருளினை அளிக்கும் அப்பனே உலகில்**
**அன்புளார் வலிந்தெனக்கு ஈந்த**
**பொருளினை வாங்கிப் போனபோ தெல்லாம்**
**புழுங்கிய புழுக்கம்நீ அறிவாய்**
**மருளும்அப் பொருளைச் சாலகத்து எறிந்து**
**மனமிக இளைத்ததும் பொருளால்**
**இருளுரும் எனநான் உளம் நடுங்கியதும்**
**எந்தைநின் திருவுளம் அறியும்** என்ற பாடலை ஊன்றி கவனிக்க வேண்டும். மேலும், வள்ளல் பெருமானார் 'ஈயென்று நான் ஒருவரிடம் நின்று கேளாத இயல்பும்' என்று இறைவனிடம் வேண்டுகிறார். இந்நிலையில், அவர் மீது அன்பு கொண்டோர் வலிந்து அவருக்கு பொருள் முதலியன கொடுத்தபோது மனம் புழுங்கி இருக்கிறார். ஏனென்றால், பொருள் சேரச் சேர இறை சிந்தனை மறைந்து அறியாமை என்னும் இருள் மிகும் என்பதால் அவ்வாறு வறுந்துற்றார். இதை வைத்துப் பார்க்கும்போது அறிவே சிறந்தது" என்றார்.

**இரண்டாமவரைப் பார்த்து,** "செல்வத்திற்கு எப்போதும் எல்லையுண்டு, நிறையுண்டு, அளவுண்டு, கணக்கு உண்டு. அறிவுக்கோ அதுபோன்று எல்லைகள் எதுவும் கிடையாது. ஆகவே அறிவுதான் சிறந்தது.

*மேலும், ஔவையார் அருளிய மூதுரையில்*

**மன்னனும் மாசறக் கற்றோனும் சீர்தூக்கின்**
**மன்னனில் கற்றோன் சிறப்புடையன் – மன்னற்குத்**
**தன்தேசம் அல்லால் சிறப்பில்லை; கற்றோர்க்குச்**
**சென்ற இடமெல்லம் சிறப்பு''** *என்றார்.*

*அடுத்து,* **குரு மூன்றாம் நபரைப் பார்த்து,** *"அறிவு என்பது தீர்க்க தரிசிகள், ஞானிகள், மகான்கள் இவர்களது பரம்பரைச் சொத்து. ஆனால், செல்வமோ கொடுங்கோலரின் ஆயுதம். ஆகவே, அறிவுதான் சிறந்தது" என்று கூறி*

**"அருட்செல்வம் செல்வத்துள் செல்வம் பொருட்செல்வம்**
**பூரியார் கண்ணும் உள.**

*அதாவது, பொருட்களாகிய செல்வங்கள் இழிந்தவரிடத்திலும் உள்ளன. உயர்ந்தவரிடத்தில் மட்டுமே உள்ள அருளாகிய செல்வமே செல்வங்களில் சிறந்த செல்வமாகும்" என்று ஒரு அற்புதமான குறளையும் அதன் விளக்கத்தையும் சொன்னார்.*

*அடுத்து,* **நான்காமவரைப் பார்த்து,** *"செல்வனுக்கு எப்போதும் விரோதிகள் அதிகம். ஆனால், அறிஞனுக்கோ நண்பர்கள் அதிகம். ஆகவே, அறிவுதான் சிறந்தது" என்றார்.*

*பிறகு* **ஐந்தாமவரைப் பார்த்து,** *"அறிவுள்ளவன் எப்போதும் தன் அறிவைப் பிறருக்கு வாரி வழங்கிக் கொண்டிருப்பான். அவனிடம் தாராளத் தன்மை இருக்கும். ஆனால், செல்வனிடம் கஞ்சத்தனம்தான் இருக்கும். இதற்கு உதாரணமாக வள்ளல் பெருமானார் அருளிய திருஅருட்பாவை காணுங்கள்.*

**பணத்திலே சிறிதும் ஆசை ஒன்றிலைநான்**
**படைத்த அப்பணங்களைப் பலகால்**
**கிணற்றிலே எறிந்தேன் குளத்திலும் எறிந்தேன்**
**கேணியில் எறிந்தனன் எந்தாய்**
**குணத்திலே நீதான் கொடுக்கின்ற பொருளை**
**எறிகலேன் கொடுக்கின்றேன் பிறர்க்கே**
**கணத்திலே எல்லாம் காட்டும் நின்அருளை**
**கண்டனன் இனிச் சொல்வதென்னே.**

*ஒருவரை நாம் நல்லோர் என்று கூறுவது அவரிடம் இருக்கும் பொருளைக் குறித்தோ அல்லது அவர் அணிந்திருக்கும் விலையுயர்ந்த ஆடையைக் குறித்தோ அல்ல. அவரது குணத்தை குறித்தே ஆகும். எனவேதான் பெருமானார் பொருளையெல்லாம் எரிந்துவிட்டு இறைவன்*

*தனக்குக் கொடுத்த குணத்தையே பிறருக்குக் கொடுத்தார். ஆகவே அறிவுதான் சிறந்தது" என்றார்.*

**ஆறாமவரைப் பார்த்து,** *"செல்வம் பிறர்க்குக் கொடுக்கக் கொடுக்கக் குறைந்து கொண்டே இருக்கும். மாறாக கல்வியோ அதிகரித்துக் கொண்டே வரும்'' என்றார்.*

**ஏழாமவரைப் பார்த்து,** *"உங்களிடம் செல்வம் இருந்தால் நீங்கள்தான் அதைக் காப்பாற்ற வேண்டும். ஆனால் அறிவோ உங்களை எப்போதும் காப்பாற்றும். இதை குறளதிகாரத்தில்*

**அறிவு அற்றம்காக்கும் கருவி செறுவார்க்கும்**
**உள்ளழிக்க லாகா அரண்**

*அறிவு அழிவு வராமல் காக்கும் கருவியாகும். அன்றியும் பகைவராலும் அழிக்கமுடியாதபடி உள்ளே அமைந்திருக்கும் கோட்டையுமாகும். இதற்கிணங்க அறிவுதான் சிறந்தது" என்றார்.*

**எட்டாமவரைப் பார்த்து,** *"செல்வத்தை கள்வர்களால் திருடிக் கொண்டு போக முடியும். ஆனால், அறிவை யாராலும் கவர முடியாது. ஆகவே, அறிவுதான் சிறந்தது" என்றார்.*

**ஒன்பதாமவரைப் பார்த்து,** *"செல்வம் கால ஓட்டத்தில் அழிந்து விடும். ஆனால், அறிவைக் கால ஓட்டம் ஒன்றும் செய்துவிட முடியாது.*

**சடமாகி இன்பம் தராதாகி**
**மிகுபெரும் சஞ்சலாகாரமாகிச்**
**சற்றாகி வெளிமயல் பற்றாகி ஓடும்**
**இத்தன்மைபெறு செல்வம் அந்தோ**
**விடமாகி ஒருகபட நடமாகி ஆற்றிடை**
**விரைந்துசெலும் வெள்ளமாகி**
**வேலை அலையாகி ஆங்கார வலையாகி**
**முதிர்வேனில் உறுமேகம் ஆகிக்**
**கடமாய சகடமுறு காலாகி**
**நீடுவாய்க் காலோடும் நீராகியே**
**கற்பிலா மகளிர்போல் பொற்பிலாது உழலும்**
**இதுகருதாத வகை அருளுவாய்**
**தடமேவு சென்னையில் கந்தகோட்டத்துள் வளர்**
**தலம்ஓங்கு கந்தவேளே**
**தண்முகத் துய்யமணி உண்முகச் சைவமணி**
**சண்முகத் தெய்வமணியே.**

*என்ற வள்ளல் பெருமானின் திருஅருட்பா பாசுரத்தில் செல்வத்தின் கீழான தன்மையையும் அதனால் வரும் தீய விளைவுகளையும் நம் நெஞ்சத்திற்கு சுட்டிக் காட்டுகின்றார். அதுவொரு சடப்பொருள்; இத்தகைய பொருளைக் குறித்து நாம் செயல்களைச் செய்யும்போது நம்மை ஒழுக்க நெறிகளிலிருந்தும் நீங்கச் செய்து மன சஞ்சலத்தை ஏற்படுத்தி துன்பத்தைக் கொடுப்பதால்* **இன்பம் தராதாகி** *என்கிறார்.*

*மேலும், வெள்ளப் பெருக்கில் ஓடும் நீரானது தான் செல்லும் இடத்திலெல்லாம் அழிவுகளையே ஏற்படுத்தும். அதுபோல் பெருமளவு செல்வம் சேரச் சேர அது அழிவையே ஏற்படுத்தும் என்பதால்* **'ஆற்றிடை விரைந்து செல்லும் வெள்ளமாகி'** *என்கின்றார். அதுமட்டுமல்லாது, சிறு புழுவிற்கு ஆசைப்பட்டு வலையில் அகப்பட்டு உயிரிழக்கும் மீனைப்போல பொருளாசை என்ற சிறு புழுவிற்கு ஆசைப்பட்டு செல்வோர் ஆங்காரம் என்ற வலையில் சிக்கி தானும் கெட்டு தன்னைச் சார்ந்த அனைத்தையும் கெடுத்து துன்பத்தையே அனுபவிப்பர் என்பதால்* **'ஆங்கார வலையாகி'** *என்கின்றார். இதை ஊன்றி நினைக்கில் அறிவுதான் சிறந்தது'' என்றார்.*

**பத்தாமவரைப் பார்த்து,** *"செல்வம் உள்ளத்தில் செருக்கையும், ஆணவத்தையும் ஏற்படுத்துகிறது. அதனால், தன்னைக் கடவுள் என்று உரிமை கொண்டாடும் நிலைக்கு மனிதனைக் கீழ்மைப்படுத்திவிடுகிறது. ஆனால் அறிவோ, 'இறைவனே! நாங்கள் உனது அடிமைகள்' என்ற பணிவையும் பண்பாட்டையும் வளர்த்து சகோதரத்துவ நல்வாழ்வைத் தருகிறது. இதனால்தான் வள்ளல் பெருந்தகை*

**அன்னையினும் பெரிதினிய கருணை ஊட்டும்**
**ஆரமுதே என்னுறவே அரசே இந்த**
**மண்ணுலகில் அடியேனை என்னே துன்ப**
**வலையில் அகப்பட இயற்றி மறைந்தாய் அந்தோ**
**பொன்னை மதித்திடுகின்றோர் மருங்கே சூழ்ந்து**
**போனகமும் பொய்யுறவும் பொருந்தல் ஆற்றேன்**
**என்னை உளம் கொள்ளுதியோ கொள்கிலாயோ**
**என்செய்வேன் என்செய்வேன் என்செய்வேனே**

*என பொன் பொருளில் பற்றுடையோரிடம் கொள்ளும் பொய்யுறவு வேண்டாம்; அவர்களிடமிருந்து என்னைக் காப்பாற்று என இறைவனிடம் மன்றாடுகின்றார்" என்று விளக்கம் அளித்தார்.*

ஆக, இதனின்று நாம் தெரிந்து கொள்ள வேண்டியது யாதெனில்; அறிவே நம் வாழ்வில் தேடக்கூடிய பெருஞ்செல்வம். அத்தகைய அறிவை தரக்கூடிய கல்வியையே கற்க வேண்டும். இக்கல்வியை கல்லாதவர் தன்மை எத்தகையது என வள்ளுவப் பெருந்தகை பின்வரும் குறட்பாவில் விளக்குகின்றார்.

**விலங்கொடு மக்கள் அனையர் இலங்குநூல்**
**கற்றாரோடு ஏனை யவர்.**

அதாவது, அறிவு விளங்குதற்குக் காரணமான நூல்களைக் கற்றவரோடு அதைக் கல்லாதவர்களை ஒப்பு நோக்கினால் விலங்கிற்கும் மக்களுக்குமான வேறுபாடு உள்ளது என்பதாம்.

இதனின்று மற்றொரு உண்மையையும் உணர்ந்து கொள்ள வேண்டும். **நாம் கற்கும் கல்வி அறிவை விளங்கவைக்கும் தன்மை கொண்டதாகவும் மனதை நல்வழியில் செலுத்த வல்லதாகவும் அமைந்திருக்க வேண்டும். நமது அஞ்ஞானத்தையும் அகங்காரத்தையும் பாதுகாத்து, வளர்க்கக்கூடியதாக இருக்கக் கூடாது.**

மேலும், ஒரு செயலின் எல்லையில் கிடைக்கக்கூடியது **முடிவுப் பயன்.** இடையிடையே கிடைக்கக்கூடியது **அவாந்திரப் பயன்** என்பர் ஆன்றோர். அதற்கிணங்க, கல்விக்கும் கடவுளை அடைவதற்கும் இடையே உள்ள அவாந்திரப் பயன்களைக் காண்போம்.

**கல்வியினால் விளையக்கூடியது அறிவு; அறிவினால் விளையக்கூடியது ஒழுக்கம்; ஒழுக்கத்தின் பயன் அன்பு; அன்பினால் விளையும் பயன் அருள்; அருளின் பயன் கடவுள்.** இஃது ஆன்றோர் ஆய்வின் முடிவு.

நாம் பெற வேண்டிய செல்வங்கள் எல்லாவற்றிலும் மேலான செல்வம் அறிவு என்றபோதிலும் அந்த அறிவு எத்தன்மையதாய் இருக்க வேண்டும் என்பதையும் தெரிந்து அதற்கான கல்வியையே கற்க வேண்டும்.

அறிவு என்பது மின் விளக்கினைப்போல் அல்லாமல் அகல் விளக்கின் ஒளி போன்று இருக்க வேண்டும். ஒரு அகல் விளக்கினைக் கொண்டு ஆயிரம் விளக்குகளை ஏற்றலாம். ஆனால், ஒரு மின்விளக்கினால் ஒரேவொரு மின்விளக்கைக்கூட ஒளிபெறச் செய்ய முடியாது. அதுபோல் ஒருவர் பெற்ற அறிவினால் பலர் வாழ்வில் உயர்வடைய வேண்டும்.

மேலும், அகல் விளக்கின் தீபம் எந்நிலையிலும் மேல் நோக்கியே எரியும் தன்மை கொண்டது. ஆனால், மின் விளக்கின் ஒளி அப்படியல்ல. அதுபோல் அறிவு எக்காலத்திலும் நம்மை உயர் நிலையில் செலுத்துவதாய் இருக்க வேண்டும்.

**சென்ற இடத்தால் செலவிடா தீதொரீஇ**
**நன்றின்பால் உய்ப்பது அறிவு**

என்கிறார் வள்ளுவப் பெருந்தகை. மனம் போன போக்கெல்லாம் போகவிடாமல், தீமையான செயல்களிலிருந்து நீக்கிக் காத்து நன்மையான செயல்களில் செல்லவிடுவதே அறிவாகும்.

**அறிவினான் ஆகுவது உண்டோ பிறிதின்நோய்**
**தந்நோய்போல் போற்றாக் கடை**

மற்ற உயிரின் துன்பத்தை தன் துன்பம்போல் கருதிக் காப்பாற்றாதபோது, பெற்றுள்ள அறிவினால் என்ன பயன்? என திருவள்ளுவர் மக்களைப் பார்த்து கேட்கிறார். ஆக, அறிவு என்பது பிறர் துன்பத்தைப் போக்குவதாக அமைதல் வேண்டும்.

இவை எல்லாவற்றையும் வைத்துப் பார்க்கும்போது **அறநூல்களைக் கற்பதே சிறந்த கல்வி** என்பது புலனாகிறது.

இமாலயத்தில் இன்றளவும் வாழ்ந்து கொண்டிருக்கும் யோகி ரிப்போன்ச் கோவிந் லாமா (லாமா - பக்குவ நிலையில் உள்ள ஆன்மா). அவர் நாற்பது, ஐம்பது நாட்களென பனி படர்ந்த இமயத்தின் அடிவாரத்தில் ஆகாரமும் தண்ணீரும் இல்லாமல் தவம் செய்பவர். அவர் ஒருமுறை தன் சொந்த ஊருக்குச் செல்கிறார். அவர் வருகையை முன்னிட்டு அக்கிராமத்து மக்கள் கூடி வழிபாடு செய்கின்றனர். அந்த யோகியை நேர்காணல் செய்ய நிருபர் ஒருவரும் வந்திருந்தார்.

அவரிடம் அந்த யோகி, “இங்கு நான் மட்டும் லாமா அல்ல. இங்கு உள்ள பெரியோர்கள் அனைவருமே லாமாக்கள்தான்” என்றார்.

அதற்கு அந்த நிருபர், “ஐயா! இவர்களை எப்படி லாமாக்கள் என்கிறீர்கள்?” என்று வினவினார்.

அதற்கு கோவிந் லாமா அவர்கள், **“இவர்களது சிறுபருவத்தில் பள்ளிக் கூடங்கள் இல்லை. இவர்கள் கற்க வேண்டுமென்றால் தரும நூல்களையே கற்க வேண்டும். பாவம்! இன்றைய காலத்தில் பள்ளிக்**

**கூடங்கள் வந்துவிட்டதால் தரும நூல்களை படிக்க குழந்தைகளுக்கு நேரமில்லாமல் போகின்றது”** *என்றார்.*

*இதனின்று கல்வி என்றாலே அது அறநூல்களைக் கற்றல் என்பது தெளிவாகிறது.*

*இறைவனிடம் வழிபாடு செய்யும்போதும் நம் பெருமானார்*

**நாடிநின்றே நினை நான்கேட்டுக் கொள்வது நண்ணும் பத்துக்**
**கோடியன்றே; ஒருகோடியின் நூற்றொரு கூறுமன்றே;**
**தேடிநின்றே புதைப்போரும் தருவர்; நின்சீர்நினைந்து உட்பாடி**
**அந்தோ மனம்வாடி நின்றேன் முகம் பார்த்தருளே**

*என விண்ணப்பிக்கின்றார்.*

*இறைவனிடம் வேண்டுதல் செய்யும்போதும் பொருட்செல்வத்தை வேண்டுவதைவிட்டு அவரின் அருட்செல்வமாகிய கருணை நிதியையே வேண்டுதல் வேண்டும். அது ஒன்று இருந்தால் எல்லாவற்றையும் அடையலாம் என்பதே இப்பாசுரத்தால் நாம் பெறும் தெளிவு.*

**ஊர்தருவார் நல்ல ஊண்தருவார் உடையும் தருவார்**
**பார்தருவார் உழுற்கு ஏர்தருவார் பொன் பணம் தருவார்**
**சோர்தருவார் உள்அறிவு கெடாமல் சுகிப்பதற்கு இங்கு**
**யார்தருவார் அம்மையார் தருபாகனை அன்றி நெஞ்சே.**

*இன்றைய உலகில் பொன்னிற்கும் பொருளுக்கும் ஆசைப்பட்டு மனித நேயமே இல்லாமல் எத்தனையோ அநீதிகள் நடப்பதை நாம் கண்கூடாகக் காண்கிறோம். எனவே,* **சகல செல்வங்களும் இருந்தாலும் உள்ளே அறிவு கெடாமலும், மனிதத் தன்மை மாறாமலும் இருக்க வேண்டுமானால் அதற்கு ஒரே வழி இறை நெறியில் செல்வது ஒன்றே** *என மேற்கண்ட பாசுரத்தில் நம் வள்ளல் பெருமானார் அருளியுள்ளார்.*

*எனவே, மனமாசினை நீக்கி; நம்மை நல்வழியில் செலுத்தியும், பிற உயிர்களின் துன்பத்தை நீக்கவல்ல ஆற்றலை அளிக்கக்கூடிய அறிவையும் பெற்றுத்தரும் ஞான நெறியாகிய சன்மார்க்கக் கல்வியிலே பயின்று வாழ்வில் எல்லா வளங்களும் நலங்களும் பெற்று உய்வோமாக!*

சன்மார்க்க கல்வி→சுத்த அறிவு→ஒழுக்கம்→அன்பு→அருள்→கடவுள்

*திருச்சிற்றம்பலம்*

# பயம் பூஜ்ஜியம்

இறைவன் படைத்த மனிதனுக்கு வாழ்க்கை என்பது ஓர் அனுபவக் கல்வி. அவன்தன் வாழ்க்கையில் ஏற்படுகின்ற நிகழ்வுகளை எவ்வாறு எதிர்கொள்கின்றானோ அதன் அடிப்படையிலேயே அவனுடைய வாழ்க்கை சூழல் அமைகிறது.

வாழ்க்கையில் நிகழ்கின்ற சவால்களை எதிர்கொள்கின்றவிதம், துணிவுடனோ அல்லது பயத்துடனோ என்பதை பொருத்தே இன்பதுன்ப அனுபவங்கள் ஏற்படுகின்றன. இந்த அனுபவத்தின் அடிப்படையிலேயே வாழ்க்கை நிர்ணயமாகிறது.

**பயம்தான் சவால்களை பிரச்சனைகளாக காட்சியுறச் செய்து இறுதியில் எதிர்மறையான வாழ்க்கைக்கு வித்திடுகிறது. மாறாக, துணிவு திறமையை வெளிபடுத்தி சவாலை சுலபமாக எதிர்கொண்டு வெற்றியடையச் செய்கிறது.** இதற்கு உதாரணமாக பின்வரும் கதையைக் காண்போம்.

ஒரு முறை பலராமரும் கிருஷ்ணரும் காட்டிற்குச் சென்றார்கள். சூரியன் அஸ்தமனம் ஆகி சந்திரோதயம் தொடங்கியது. எனவே, கிருஷ்ணர் பலராமரை பார்த்து, “நான் ஓய்வெடுக்கிறேன் நீ காவல் இரு, நீ ஓய்வெடுக்கும் போது நான் காவல் இருக்கிறேன்” என்று கூறிவிட்டு உறங்கச் சென்றார். பலராமர் காவல் காக்க ஆரம்பித்து அங்கும் இங்கும் நடந்துகொண்டிருந்தார். திடீரென, அங்கு ஒரு அசுரன் தோன்றினான். அந்த அசுரன் பலராமரை பார்த்து பெரிய சத்தத்தோடு கத்தி பயமுறுத்தினான். அதைக் கேட்டு பயந்து திடுக்கிட்ட பலராமர் தன் உருவத்திலிருந்து சிறிது சுருங்கினார். அந்த அசுரனோ பலராமரைவிட தன்னுடைய உருவத்திலிருந்து பெரியதானான்.

பிறகு, அந்த அசுரன் மீண்டும் ஒருமுறை பலராமரை நோக்கி கத்தினான். பலராமர் மறுபடியும் பயந்ததால் தன்னுடைய உருவத்திலிருந்து இன்னும் சுருங்கினார். அந்த அசுரனோ இன்னும் பெரியதானான். மறுபடியும் அந்த அசுரன் பலராமரை நோக்கி கத்தினான். பலராமர் அசுரனின் பெரிய உருவத்தையும் சத்தத்தையும் பார்த்து 'கிருஷ்ணா' என்று அலறி மயங்கி விழுந்தார்.

பலராமரின் ‘கிருஷ்ணா’ என்ற சத்தத்தை கேட்ட கிருஷ்ணர் அவர் ஓய்வெடுப்பதற்காக தன்னை எழுப்புகின்றார் என்று எண்ணிக்கொண்டு, தான் காவல் காக்க ஆரம்பித்தார்.

இப்பொழுது அந்த அசுரன் புதியதாக ஒருவர் அங்கு நிற்பதைப் பார்த்து முன்போல் அச்சுருத்துவதற்காக கிருஷ்ணரை நோக்கி கத்தினான். கிருஷ்ணர் பயப்படாமல் அந்த அசுரனின் எதிரிலேயே போய் நின்றுகொண்டு, "என்ன வேண்டும் உனக்கு?" என்று கேட்டார். கிருஷ்ணரின் துணிச்சலினால் கிருஷ்ணர் தன் உருவ அளவில் பெரியதானர், அசுரன் தன்னுடைய அளவிலிருந்து சுருங்கினான்.

மறுபடியும் அசுரன் கிருஷ்ணரை நோக்கி கத்தினான், கிருஷ்ணரும் மறுபடியும், "என்ன வேண்டும் உனக்கு?" என்று கேட்க அசுரனின் உருவம் சுருங்கி கிருஷ்ணரின் உருவம் மேலும் பெரியதாயிற்று. இறுதியாக, அசுரன் கிருஷ்ணரை நோக்கி கத்தினான். கிருஷ்ணர் சிறிதும் அச்சமின்றி, "என்னதான் வேண்டும் உனக்கு?" என்றதும் அசுரன் கிருஷ்ணரின் கை சுண்டுவிரல் அளவிற்கு சுருங்கிவிட்டான்.

பிறகு, கிருஷ்ணர் அந்த அசுரனை தனது இரு விரல்களால் பிடித்து தனது இடுப்பில் செருகிக் கொண்டார்.

பொழுதுவிடிந்ததும் கிருஷ்ணரும் பலராமரும் பயணத்தை தொடங்கினர். நடந்து கொண்டிருக்கையில் பலராமர் கிருஷ்ணரிடம், "நேற்று என்ன நடந்தது என்று உனக்கு தெரியுமா? ஒரு பெரிய அசுரன் தோன்றி மிகவும் அச்சுருத்தினான்" என்றார். அப்போது கிருஷ்ணர் மெதுவாக தனது இடுப்பில் செருகியிருந்த அசுரனை வெளியே எடுத்து, "பலராமா! நீ இதைப் பற்றியா சொல்லிக் கொண்டிருக்கிறாய்?" என்று காட்டினார். அதற்கு பலராமர், "நேற்று இதை நான் பார்த்தபோது மிகவும் பெரியதாக இருந்ததே. எப்படி இது இவ்வளவு சிறியதாயிற்று" என்றார்.

இப்புராணக்கதையின் மூலமாக அறிவது யாதெனில், ஒருவன் தான் எதிர்கொள்ள வேண்டிய சவால்களை எதிர்கொள்ள தயங்குகின்ற போது அது அவனைக் காட்டிலும் மிகப் பெரியதாக மாறி அவனையே ஆட்கொள்கிறது. மாறாக, ஒருவன் தான் எதிர்கொள்ள வேண்டிய சவால்களை துணிவுடன் எதிர்கொண்டால் அது அவனைக்காட்டிலும் சிறியதாகிவிடுகிறது. இக்கதையில் நாம் எதிர்கொள்ள வேண்டிய சவால்களே அசுரனாக சுட்டிக் காட்டப்பட்டுள்ளது.

நாம் வாழ்வில் எதிர்கொள்ள வேண்டிய சவால்களை எதிர்கொள்ளத் துணியாமல் தள்ளிப்போட்டுக் கொண்டேயிருந்தால் அவை ஒவ்வொன்றும் பெரிய அசுரனாக உருவெடுத்து அச்சுருத்தி நம்மையே ஆட்கொண்டுவிடும். மாறாக, நாம் அதை எதிர்கொண்டால் சுலபமாகத் அதற்கு தீர்வு காண முடியும்.

*சவால்கள் என்பது நமது வாழ்வின் அடுத்த பரிமாணத்தின் நுழைவு வாயில். அதை எதிர்கொள்ள தயங்கினால் நம்முடைய வளர்ச்சியை நாமே தடைசெய்வதுபோலாகும்.*

*இதை உணர்ந்து பார்க்கில் நமக்கு தெரிய வருவதாவது, வாழ்வில் ஏற்படும் மிகப் பெரிய சவால்களும், பொறுப்புகளும், மிகக் கடினமான சூழ்நிலைகளும் நமது ஆற்றலை வெளிப்படுத்தி நம்மை ஜொலிக்க வைப்பதற்கும் பக்குவபடுத்துவதற்கும் ஏற்படுகின்றன. எப்படி உலைக்களத்தில் தங்கத்தை சுட்டு ஜொலிக்க வைக்கின்றார்களோ அதைப் போன்றதாகும்.*

*வாழ்வில் ஏற்படும் துன்பங்கள் மற்றும் சவால்களின் நோக்கம் நம்மை முழு மனிதனாக ஆக்குவதற்கே!*

*ஆகையால் நாம் ஆழ்ந்து நினைவில் கொள்ள வேண்டியது நமக்கு ஏற்படும் சவால்கள் அனைத்தும் நம்மை உருவாக்குவதற்கே!*

*மேலும், எதிர்பாராமல் நடந்த இழப்பையும் படிக்கற்களாகக் கொண்டு மேல்நிலை அடைந்த ஒரு விஞ்ஞானியின் வாழ்க்கை அனுபவத்தை இங்கே காண்போம்.*

*தாமஸ் ஆல்வா எடிசன், அறிவியல் உலகில் நூற்றுக்கணக்கான கண்டுபிடிப்புகளை உருவாக்கியவர். தனது வாழ்நாள் முழுவதையும் ஆராய்ச்சி கூடத்திலேயே செலவழித்தவர். அவர்தம் வாழ்வில் ஓர் சம்பவம். 1914ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 10ஆம் நாள் அவரது ஆராய்ச்சிக் கூடத்தில் தீ பிடித்தது. ஆராய்ச்சி கூடம் முழுவதும் எரியத் தொடங்கியது. அதை கேள்விப்பட்டு அங்கு வந்த அவரின் மகன் சார்லஸ், தனது தந்தையை தேடினான். அவர் ஆராய்ச்சி கூடத்தின் வெளியே ஒரு ஓரமாக நின்றபடி, எரிந்து கொண்டிருந்த ஜுவாலையை பார்த்துக் கொண்டிருந்தார்.*

*தந்தையை கண்ட மகன் பதற்றத்துடன், “அப்பா! ஆராய்ச்சிக் கூடம் தீ பிடித்து எரிகிறது! நீங்கள் பல ஆண்டுகளாகச் செய்த ஆராய்ச்சியெல்லாம் சாம்பலாகிக் கொண்டிருக்கிறது” என்று சொன்னான். அதற்கு எடிசன் அவர்கள் சிறிதும் பதற்றப்படாமல் “இது போல் ஒரு காட்சியை இனிமேல் காண்பது கடினம். போ! உன் அம்மாவையும் அழைத்து வா!” என்றார்.*

*“என்னப்பா, உங்களின் எல்லா கண்டுபிடிப்புகளும் எரிந்து கொண்டிருக்கிறதே என்று நான் வருத்தத்தோடு சொன்னால், நீங்கள் இப்படி சொல்கிறீர்களே?” என்றான் சார்லஸ்.*

அதற்கு அவர் நிதானமாக "மகனே! எரிந்து கொண்டிருப்பவை எல்லாம் இதுவரை நான் ஆய்வில் செய்த தவறுகள். வா, இனி புதிதாகத் தொடங்குவோம்!" என்றார்.

எந்தவொரு இழப்பும் இழப்பல்ல. அவை நாம் அடுத்து மேற்கொள்ளவிருக்கும் புதிய முயற்சிக்கான உரம். ஏனென்றால், நாம் பொருட்களை மட்டுமே இழக்கிறோம். ஆனால், அதை உருவாக்க நாம் மேற்கொண்ட முயற்சியின்போது ஏற்பட்ட அனுபவத்தை இழப்பதில்லை.

இந்த அனுபவத்தை கொண்டு எத்தனை புதுமைகளை வேண்டுமானாலும் படைத்துக் கொள்ளலாம். எடிசனின் வாழ்விலும் இதுதான் நடந்தது. இதைத்தான் நம் வள்ளுவப் பெருந்தகையும்,

**இடும்பைக்கு இடும்பை படுப்பர் இடும்பைக்கு**
**இடும்பை படாஅ தவர்.**

ஊக்கம் உள்ள மனதினை உடையோர் துன்பம் வரும்போது அத்துன்பத்திற்கே துன்பம் கொடுப்பவராய் இருப்பர்.

மேலும், நாம் இறைவனை துணையாக வைத்துக் கொண்டால் இந்த உலகத்தில் எதுகுறித்தும் பயம் கொள்ள வேண்டிய அவசியமே இல்லை.

**எஞ்சேல் உலகினில் யாதொன்று பற்றியும்**
**அஞ்சேல் என்றருள் அருட்பெருஞ்ஜோதி**

என்ற நம் வள்ளல் பெருமானாரின் திருவாக்கிற்கிணங்க எல்லாம் வல்ல இறைவனை நம் வாழ்வின் மெய்த்துணையெனக் கொண்டால் பயம் நீங்கி இன்பமாக வாழலாம்.

...திருச்சிற்றம்பலம்...

# ஆழ்நிலை தியான முகாம்

## அனுபவப் பகிர்வு

**செ**ன்ற மாதம் 18, 19, 20 ஆகிய தேதிகளில் நம் சன்மார்க்க சங்கத்தின் சார்பில் நடந்த ஆழ்நிலை தியான முகாமில் கலந்து கொண்ட அன்பர்களின் அனுபவப் பகிர்வுகள் சிலவற்றை காண்போம்.

"ஐயா நான் ஏற்கனவே கொஞ்சம் யோகா படித்திருக்கிறேன். நான் ஆசிரியராக பணியாற்றுகின்றேன். தினமும் அதிகாலையில் எழுந்து யோகம், தியானம் செய்யவேண்டுமென்று நினைப்பேன். ஆனால் பள்ளி செல்வதற்கு நேரம் ஆகிவிடுகின்ற காரணத்தால் என்னுடைய கடமையை செய்ய முடியாமல் போகிறது. இந்த மூன்று நாள் முகாமில் என் மனதை மாற்றிய விஷயம் என்னவென்றால்,

**புலால் மறுத்தல்.** ஆடு, கோழிகளை வெட்டும்போது, அது துடிப்பதைக் கண்டு என் மனம் மிகவும் வேதனைப்படும். நான் மனதிற்குள் அழுதுவிடுவேன். எனவே இனி மாமிசம் உண்ணக்கூடாது என்று முடிவெடுத்து உள்ளேன். இதை எனக்கு தெரிந்த அனைவருக்கும் எடுத்துச் சொல்வேன். அருட்பெருஞ்ஜோதி அருட்பெருஞ்ஜோதி தனிப்பெருங்கருணை அருட்பெருஞ்ஜோதி"

**– அ. பிதருனிசாபேகம், அட்டகட்டி.**

"எனக்கு இந்த வகுப்பு மிகவும் பயனுள்ளதாக இருந்தது. எப்படியென்றால் மகாமந்திரம் இரண்டு அடியாக இருந்ததால் சொல்வதற்கு சிரமமாக இருந்தது. ஓம்நமசிவாய மந்திரமே மிகவும் சுலபமாக இருந்தது. இந்த வகுப்பில் மந்திரத்தின் சூட்சுமத்தை அழகாகக் கூறினார்கள். மற்ற மந்திரங்கள் சமயம் சார்ந்தது என்றும், மகாமந்திரம் எந்த சமயத்தையும் சாராதது என்றும் எச்சமயத்தவரும் துதிக்கும் தன்மையுள்ளது எனவும் அறிந்து கொண்டேன். மேலும் இம்மந்திரத்தின் உண்மைப் பொருளை அறியும்போது மெய்சிலிர்த்துப் போனேன். இனி என்னை மறந்தாலும் இம்மகாமந்திரத்தை மறக்க மாட்டேன்." **– அம்பிகா, கோவை.**

"குருவிடம் பாடம் கேட்கும்போது காலி பாத்திரமாக இருக்க வேண்டும்.

நான், எனது என்பதுதான் துன்பத்திற்குக் காரணம். பூரண இன்பம் இறைவனிடம் மட்டுமே உண்டு. இறைவனை நினைக்காத நாளெல்லாம் கருநாள்.

நம் வாழ்வில் எந்தவொரு விஷயத்திற்கும் response பண்ணனும் react பண்ணக் கூடாது.

திருஅருட்பாவை முதலில் மனப்பாடம் செய்ய வேண்டும். பிறகு தானே புரியும்." **– தே. மணிமேகலை, ஏழாயிரம்பண்ணை.**

"ஞானசபை விளக்கம் எனக்கு மிகவும் பிடித்திருந்தது. அகல்விளக்கிற்கும் ஆன்மாவிற்குமான விளக்கம் நான் இதுவரை அறிந்ததில்லை. தெளிவான விளக்கம்." **– சுஜாதா.**

"புலால் உணவு கைவிடுவது, எல்லா உயிர்களையும் தன்னுயிர் போல் எண்ணுவது, கடவுளை எப்போதும் மனம் உருக வேண்டுவது, கோபம் கொள்ளதிருத்தல், கருஞ்சொற்களைத் தவிர்த்தல் போன்றவை என்னை மிகவும் மாற்றியது." **– தேவி, சாத்தூர்.**

"மௌனத்தின் மேன்மையை உணர்ந்தேன். மகிழ்ந்தேன். மந்திர ஜெபம் – எனக்கு வரம்." **– முத்து.**

# மூத்தோர் சொல் அமிர்தம்

**ஞா**னி ஒருவர் தன்னிடம் சீடனாகச் சேர யார் வந்தாலும், "அதோ அங்கே இருக்கும் குளத்தைப் போய்ப் பார். அங்கே என்ன பார்த்தாய் என்று சொல்" என்று கேட்பார்.

அவர்கள் சொல்லும் பதிலைக் கொண்டு சிலரைச் சீடனாக ஏற்றுக் கொள்வார். சிலரை மறுத்து விடுவார்.

இதைப் பார்த்து வியப்பு அடைந்த நண்பர் ஒருவர் அவரிடம், "ஒரே கேள்வி வழியாக எப்படிச் சீடர்களைத் தேர்ந்து எடுக்கிறீர்கள்? " என்று கேட்டார்.

அதற்கு ஞானி, "குளத்தில் மீன்கள் துள்ளுகின்றன என்று சொல்பவனைச் சீடனாக ஏற்றுக் கொள்கிறேன். அதில் என் உருவம் தெரிந்தது என்று சொல்பவனை ஏற்றுக் கொள்வது இல்லை. ஏனென்றால் அப்படிப்பட்டவன், 'தான்' என்ற எண்ணம் உடையவன். அவனுக்கு ஞானத்தை ஊட்ட முடியாது" என்று விளக்கம் தந்தார்.

**எனைத்து ஆணவமுதல் எல்லாந் தவிர்த்தே**
**அனுக்கிர கம்புரி அருட்பெருஞ்ஜோதி (அகவல் 837, 838)**

**அருளொளி விளங்கிட ஆணவம் எனுமோர்**
**இருளறஎன்னுளத்து ஏற்றிய விளக்கே (அகவல் 1493, 1494)**

---

ஒருவர் நாளிதழ் ஒன்றை படித்து கொண்டிருந்தார். ஆனால், அவரது ஆறு வயது மகள் அவரை படிக்கவிடாமல் நொடிக்கு நொடி தொந்தரவு செய்து கொண்டேயிருந்தாள்.

தன் மகளை திசைதிருப்புவதற்காக, தான் படித்து கொண்டிருந்த நாளிதழில் உலக வரைப்படம் அச்சிட்ட கடைசி பக்கத்தை கிழித்து, அதை மேலும் சிறு சிறு துண்டுகளாக கிழித்து, இந்த உலக வரைபடத்தை மீண்டும் சரியாக சேர்த்து வந்து காட்டும்படி கொடுத்தனுப்பினார்.

தன் மகள் எப்படியும் அதை சரியாக சேர்த்து கொண்டு வர ஒருநாள் ஆகும் என உறுதியாக நினைத்தார். ஆனால் அவள் சில நிமிடங்களிலேயே சரியான வரைபடத்தை கொண்டு வந்து காட்டினாள்.

*எப்படி இவ்வளவு சீக்கிரம் வரைபடத்தை சரியாக சேர்த்தாய் என்று தந்தை கேட்க, அதற்கு அவள், "அப்பா எனக்கு உலக வரைபடம் தெரியாது, ஆனால் அதன் பின்பக்கம் மனிதமுகம் இருந்தது. மனிதமுகத்தில் கண், காது, மூக்கு எல்லாம் எங்கே இருக்கும் என்று எனக்கு தெரியும். அதை சரியாக சேர்த்தேன், வரைபடம் சரியாக சேர்ந்துவிட்டது" என்று சொல்லி தந்தையை ஆச்சரியப்படுத்திவிட்டு அவள் வெளிய விளையாட சென்றாள்.*

*இவ்வுலகில் துன்பமில்லாமல் வாழ மாற்றங்களை தன்னிடத்தில் கொண்டு வந்தாலே போதும், உலகம் தானே மாறும். மனிதனின் உள்மாற்றத்திற்கு ஆன்மீகமே வழிகாட்டுகிறது.*

**அன்னையே அப்பா திருச்சிற்றம்பலத்துஎன்**
**ஐயனே இவ்வுல கதிலே**
**பொன்னையே உடையார் வறியவர் மடவார்**
**புகலும்ஆடவர் இவர்களுக்குள்**
**தன்னையே அறியாப் பிணியினால் ஆவி**
**தளர்கின்றார் தருணம் ஈதெனவே**
**சொன்னபோ தெல்லாம் பயந்துநான்**
**அடைந்த சோபத்தை நீஅறியாயோ. - திருஅருட்பா**

திருச்சிற்றம்பலம்


**Advertisement**

அருட்பெருஞ்ஜோதி தனிப்பெருங்கருணை **மணமகன் தேவை** அருட்பெருஞ்ஜோதி அருட்பெருஞ்ஜோதி

பெயர் : **R. பவித்ரா B.A., B.Ed**
பிறந்த தேதி : **07-09-1995**
எதிர்பார்ப்பு : **சன்மார்க்கம், சைவ நெறியில் உள்ள ஆன்மீகக் குடும்பம்**
முகவரி : *268, கள்ளிக்கோட்டை மெயின்ரோடு, கொண்டலாம்பட்டி,* **சேலம் - 636010.**
**Contact : 92454 07512, 99407 66770**

**மணமகள் தேவை**

பெயர் : **R. வேதவியாஸ் MCA** பிறந்த தேதி : **17-10-1991**
எதிர்பார்ப்பு : **சன்மார்க்கம், சைவ நெறியில் உள்ள ஆன்மீகக் குடும்பம்**
தொழில் : **Software Engineer, Bangalore.**
வருமானம் : **Rs.7,00,000/year**
முகவரி : *268, கள்ளிக்கோட்டை மெயின்ரோடு, கொண்டலாம்பட்டி,* **சேலம் - 636010.**
**Contact : 92454 07512, 99407 66770**

**Advertisement**

## மகாமந்திரம்

அருட்பெருஞ்ஜோதி அருட்பெருஞ்ஜோதி
தனிப்பெருங்கருணை அருட்பெருஞ்ஜோதி



வடலூர் சித்தி வளாகம் என்கின்ற மேட்டு குப்பத்தில் நடைபெறும் பசி பிணி போக்கும் திரு பணிக்கு உதவ அணுகுவீர்.

திரு. நந்தி சரவணன் ஐயா
9842679999 / 9442327059

BNS ∝

# eXS Lending Library

## எக்சஸ் வாடகை நூலகம்

**Books for All Ages**

Wings of Wisdom

| Unlimited Books Starts @ INR 1200/. | |
|---|---|
| Scheme | Books at a Time |
| Super Reader | 10 |
| Book Lover | 5 |
| Elite Reader | 4 |
| Language Reader | 3 |
| Smart Reader | 1 |
| Door Delivery Available* | |

**HABITUAL READER**

# Pay as you take and read, like 10% to 15% on book cost of 15 days.


# % may change based on books popularity, availablity and price

## SOULFUL HOME

**Schemes starts @ INR 2400/=**

| Sno | Facilities | Super | Max | Book Max | Mag Max |
|---|---|---|---|---|---|
| 1 | Books | 30 | 15 | 7 | 2 |
| 2 | Magazines | 15 | 10 | 5 | 5 |
| 3 | Scheduled Visits | 12 | 12 | 12 | 24 |
| 4 | Unscheduled Visits | 6 | 6 | 3 | 0 |

Deposit INR - 500/



**Key advantages**

1. Lifetime membership @ 100% refundable deposit INR 500/=
2. Reading charges starts @10%
3. Hassle free door step service available

| AYYAPPAN THANGAL | VALASARAVAKKAM | PORUR | OMR | VADAPALANI |
|---|---|---|---|---|
| 26792007 | 42105700 | 42107304 | 42863478 | 42642491 |



தலை குனிந்து என்னை பார் .....
தலை நிமிர்ந்து
உன்னை நடக்க வைக்கின்றேன் – புத்தகம்

9444 408 804

# அருட்பெருஞ்ஜோதி அகவல் விளக்கம்

**யாழுறும் இசையே இனிய இன்னிசையே**
**ஏழுறும் இசையே இயல் அருள் இசையே (அகவல் 1424)**

**யா**ழ் என்பது பழந்தமிழ் இசைக்கருவி. சங்க காலத்தது. சங்க இலக்கியங்களில் பெரிதும் பேசப்பெறுவது. யாழும் குழலும் பழந்தமிழ் இசைக் கருவிகளுள் சிறந்தவை.

யாழ், நரம்புக் கருவி. வீணையைப் போன்றது. வீணை சற்று பிற்காலத்தது. மாணிக்கவாசகர் காலத்திலேயே இருந்திருக்கிறது. "இன்னிசை வீணையர் யாழினர் ஒருபால்" என்று மாணிக்கவாசகர் பாடுகின்றார். இதனால் இரண்டும் வெவ்வேறு என்பதும் தெளிவாகும்.

வள்ளல் பெருமான் காலத்தில் யாழ் இல்லை. மறைந்துபட்ட, வழக்கிறந்த, கருவியாகிவிட்டது. ஆனால் வீணை இருந்தது. ஆயினும் வள்ளல் பெருமான் இசையைச் சொல்ல வந்தபோது யாழிசையையே குறிப்பிடுகின்றார்.

பழமைத் தாக்கமும், புதுமை ஆக்கமும் வள்ளல் பெருமானிடம் நிரம்ப உண்டு. பாராட்ட வேண்டிய பழமைகளைப் பாராட்டுகிறார். படைக்க வேண்டிய புதுமைகளைப் படைக்கிறார். பழமையைப் போற்றுவதில் யாழிசைக் குறிப்பும் ஒன்று.

யாழிசை என்றதுமே அடுத்து நினைவுக்கும் சொல்லுக்கும் வருவது ஏழிசை. இசையின் ஏழு ஸ்வரங்கள். குரல்[1], துத்தம்[2], கைக்கிளை[3], உழை[4], இளி[5], விளரி[6], தாரம்[7] என்பன அவை. இவ்வேழும் பழந்தமிழ்ப் பண்கள்.

பழந்தமிழ் ஏழிசைப் பண்களை இக்காலத்தில் பலரும் அறியார். இன்று பலரும் அறிந்த ஏழிசை **ச ரி க ம ப த நி** என்பதே. இவ்வேழு எழுத்துக்களும் ஏழு இராகங்களின் முதல் எழுத்துகளாம்.

1. **ச** – சட்ஜம், 2. **ரி** – ரிஷபம், 3. **க** – காந்தாரம், 4. **ம** – மத்திபம், 5. **ப** – பஞ்சமம், 6. **த** – தைவதம், 7. **நி** – நிஷாதம். இவ்வேழுமே சரிகமபதநி என்ற ஏழு எழுத்துக்களால் குறிப்பிடப்படுகின்றன. இனி அகவல் வரிகளுக்கு வருவோம்.

**யாழுறும் இசையே – யாழில் எழுகின்ற இசையே**
**இனிய இன்னிசையே – இனிமையான இன்னிசையே**
**ஏழுறும் இசையே – ஏழு பண்களாக உறுகின்ற இசையே**
**இயல்அருள் இசையே – இவையனைத்துக்கும் இயல்வதான அருளிசையே.**

*எல்லா இசைகளிலும் சிறந்த இசை அருளிசையே.*

*"ஏழிசையாய், இசைப்பயனாய், என்னுடைய தோழனுமாய் யான் செய்யும் துரிசுகளுக்கு உடனாகி" என்று பாடுகிறார் சுந்தரமூர்த்தி சுவாமிகள். இச்சுந்தரர் பாடலில் உளத்தைப் பறிகொடுத்த வள்ளல் பெருமான்*

**ஏழிசையாய் இசைப்பயனாய் இன்னமுதாய் என்னுடைய**
**தோழனுமாய் என்று முன் நீ சொன்ன பெருஞ் சொற்பொருளை**
**ஆழநினைத்திடில் அடியேன் அருங்கரணம் கரைந்து கரைந்து**
**ஊழியல் இன்புறுவதுகாண் உயர்கருணைப் பெருந்தகையே**

*என்று சுந்தரர் பாடலின் இரண்டடிகளை அப்படியே எடுத்துக் காட்டிப் பாடுகிறார்.*

*யாழிசையாய், ஏழிசையாய் இறைவன் விளங்குவதைக் கூறும் பெருமான், அவன் அருளிசையாய் விளங்குவதைக் கூறி முடிக்கிறார்.*

**நாதநல் வரைப்பின் நண்ணிய பாட்டே**
**வேத கீதத்தில் விளை திருப்பாட்டே (அகவல் 1428)**

**நாதநல் வரைப்பில் – நாத தத்துவத்தின் மேல் எல்லையில்**
**நண்ணிய பாட்டே – கிடைக்கப் பெறும் பாட்டே**
**வேதகீதத்தில் – வேத இசையில்**
**விளைதிருப்பாட்டே – விளையும் பாட்டே**

*நாத தத்துவத்தின் மேல் எல்லையில் கிடைக்கப்பெறும் பாட்டாகவும், வேத இசையில் விளையும் திருப்பாட்டாகவும் அருட்பெருஞ்ஜோதி விளங்குகிறது.*

*பாட்டைத் திருப்பாட்டு என்று, 'திரு' சேர்த்துக் கூறியது கவனத்திற்குரியது. இறையருட் பாடல்கள் திருப்பாட்டு. ஏனைய பாடல்களெல்லாம் தெருப்பாட்டு.*

**"சிதம்பரப்பாட்டே திருப்பாட்டு**
**ஜீவர்கள் பாட்டெல்லாம் தெருப்பாட்டு"** *என்னும் பெருமான் வாக்கு இங்கு நினைக்கத்தக்கது. தெருப்பாட்டுகள் பரவுவது குறைந்து, திருப்பாட்டுகள் எங்கும் பரவுவது மிக வேண்டும்.*

**...திருச்சிற்றம்பலம்...**

# மனம் அடங்கும் திறம்

**வெள்ளத்தனையது மலர் நீட்டம் மாந்தர்தம்**
**உள்ளத் தனையது உயர்வு** என்கிறது குறள்.

நீர்மட்டத்தின் அளவைப் பொருத்தே தாமரை மேலோங்கி நிற்கும். அதுபோல் ஒரு மனிதனின் உயர்வு அவனது உள்ளத்தின் உயர்வைப் பொறுத்ததே.

எனவே, நம் வாழ்வில் உயர்வு வரவேண்டுமெனில், மனதைச் செம்மைப்படுத்த வேண்டும். மனதைச் செம்மைப்படுத்துவதே நம் வாழ்வின் தலையாய கடமையாகும். இதனை மற்றொரு குறளில்

**தவம்செய்வார் தம்கருமம் செய்வார் மற்றல்லார்**
**அவம்செய்வார் ஆசைக்கு உட்பட்டு** என்கிறார். அதாவது, தவம் செய்கின்றவரே தமக்குரிய கடமையைச் செய்கின்றவர் ஆவார். மற்றவர் ஆசை வலையில் அகப்பட்டு வீண் முயற்சி செய்கின்றவரே என்பதாம்.

**மனமடங்கும் திறத்தினில் ஓர் இடத்தே இருந்தறியேன் அறிந்தோரை ஏத்திடவும் அறியேன்** என வள்ளல் பெருமானாரும் அருட்பாவில் அருளியுள்ளார். இதனின்று மனதை ஒருவழிப்படுத்துவது எவ்வளவு முக்கியம் என்பது புலனாகிறது.

மனதை ஒருநிலைப்படுத்த முற்படுவதற்குமுன் அதைப் பற்றி தெரிந்துகொள்வது மிக முக்கியம்.

**'மனம் என்பது ஒற்றுமை வேற்றுமை தொழில் தன்மை'** என்பார் நம் பெருமானார். மேலும், **'குணக் குற்றங்களை விசாரித்து அறியும் அறிவு மன அறிவு'** என்றும் அருளியுள்ளார்.

அதுமட்டுமல்லாது, **"மனம் எனும் ஓர் பேய்க்குரங்கு மடப்பயலே; பன்முகம் சேர் மனம் எனும் ஓர் பரியாசப் பயலே; விரிந்த மனம் எனும் சிறிய விளையாட்டுப் பயலே; பாய்மனம் என்று உரைத்திடும் ஓர் பராய்முருட்டுப் பயலே"** இவை யாவும் மனதின் தன்மையைப் பற்றி வள்ளல் பெருமான் அருளியது.

**மனம் அடங்கும் திறம்** என்று வள்ளல் பெருமானார் அருளியுள்ளதை இங்கு நாம் ஆழ்ந்து சிந்திக்க வேண்டும். **அடக்குதல்** என்றால் அது நம் முயற்சியைக் குறிக்கும். **அடங்குதல்** என்றால் அது இயல்பாய் அடங்கும் தன்மையைக் குறிக்கும்.

பொதுவாக மனதை அடக்க நினைத்தால் அலையும்; அறிய நினைத்தால் அடங்கும் என்பர் ஆன்றோர்.

*இவ்விதம் மனதின் தன்மையை உணர்ந்து செயல்பட்டால் தியானம் எளிதாய் சித்திக்கும். மேலும், நம் பெருமானார்* **மனத்தை வசப்படுத்தீர் வசப்படுத்தும் வழிதுறை கற்றறியீர்** *என்பார். அந்த வழிதுறை என்னவென்பதை கீழே காண்போம்.*

*ஒருமுறை போதிதர்மர் சீனாவுக்குச் சென்றார். அவரைப் பார்ப்பதற்குச் சென்ற சீனச் சக்கரவர்த்தி, 'என் மனம் அமைதியின்றி மிகவும் கலங்கி குழம்பிக் காணப்படுகிறது. நீங்கள் ஒரு மகான். உங்களின் வருகைக்காகவே நான் காத்திருந்தேன். என் மனதை அமைதிப்படுத்த நான் என்ன செய்ய வேண்டும் என்பதை எனக்குத் தெரிவியுங்கள்' என்று கேட்டான்.*

*போதிதர்மர், 'நீ ஒன்றும் செய்ய வேண்டாம். முதலில் உன் மனதை என்னிடம் கொண்டு வா' என்றார். சக்கரவர்த்திக்கு ஒன்றும் விளங்கவில்லை.*

*'நீங்கள் என்ன சொல்கிறீர்கள்?' என்று கேட்டான் சக்கரவர்த்தி.*

*போதிதர்மர், 'காலையில் நான்கு மணிக்கு யாரும் இல்லாதபோது வா. மேலும் வரும்போது மறவாமல் உன் மனதை எடுத்து வா' என்றார்.*

*இரவு முழுவதும் சக்கரவர்த்தியால் தூங்க முடியவில்லை. பலவாறாக அவன் யோசித்தான். "இந்த ஆள் ஒரு கிறுக்கன் போலத் தோன்றுகிறது. ஆனாலும், அவர் வசீகரமும் கவர்ச்சிகரமான ஆளுமையும் உள்ளவராகத் தெரிகிறாரே. 'உன் மனதை எடுத்துவர மறந்துவிடாதே' என்று அவர் கூறியதன் உள்ளர்த்தம் என்னவென்ற உண்மையை தெரிந்து கொள்ள வேண்டும்'' என்ற ஆர்வத்தால் அந்த சந்திப்பை அவனால் கைவிட முடியவில்லை.*

*ஒரு காந்தத்தால் ஈர்க்கப்பட்ட இரும்புபோல் காலை நான்கு மணிக்கு படுக்கையில் இருந்து துள்ளி எழுந்தான். 'என்ன ஆனாலும் ஆகட்டும். நான் போகவே வேண்டும். அவரிடம் ஏதோ இருப்பதாகவே அவரது கண்கள் சொல்கின்றன. என்னதான் நடக்கக்கூடும் என்பதைப் பார்ப்பதற்கு நான் போயே தீர வேண்டும்' என எண்ணி அந்த சக்கரவர்த்தி போதிதர்மரைக் காணச் சென்றான்.*

*போதிதர்மர் தன் பெரிய கைத்தடியுடன் உட்கார்ந்து இருந்தார். சக்கரவர்த்தியைப் பார்த்து, 'வந்து விட்டீரா? வாரும். எங்கே உம் மனம்? அதைக் கொண்டு வந்திருக்கிறீரா இல்லையா?' என்றார்.*

*சக்கரவர்த்தி, 'நீங்கள் சொல்வது அபத்தமாக இருக்கிறது. நானே இங்கு இருக்கும்போது என் மனமும் இங்கேதானே இருக்கும்? வேறெங்காவது வைத்துவிட்டு வரக்கூடிய ஒரு பொருள் அல்லவே அது. எனக்குள்ளேதான் அது இருக்கிறது' என்று சொன்னான்.*

*உடனே போதிதர்மர், 'ஆக ஒரு விஷயம் உறுதியாகிவிட்டது அதாவது மனம் என்பது உமக்குள்தான் இருக்கிறது' என்றார்.*

இப்போது சக்கரவர்த்தி, 'ஆமாம், மனம் எனக்குள்ளே தான் இருக்கிறது' என்றான்.

போதிதர்மர், 'நல்லது, இப்போது உம் கண்களைமூடி அது எங்கே இருக்கிறது என்பதைக் கண்டுபிடியும். அது இருக்கும் இடத்தை உம்மால் கண்டுபிடிக்க முடிந்தால் உடனடியாக அதை எனக்குச் சுட்டிக்காட்டும், அதை நான் அமைதிப்படுத்தி வைக்கிறேன்' என்றார்.

அப்படியே சக்கரவர்த்தியும் தன் கண்களை மூடினான். உள்ளுக்குள் எல்லா இடத்திலும் நோக்கினான். ஆழமாகத் தேடினான். எவ்வளவு அதிகமாய் அவன் தேடினானோ அவ்வளவு அதிகமாய் அங்கே மனதைக் காணவில்லை என்பதை அறிந்து கொண்டான்.

மனம் என்பது ஒரு இயக்கம் அல்லது செயல்பாடு. இந்த இடத்தில் இருக்கிறது என சுட்டிக் காட்டும் வகையில் ஒரு குறிப்பிட்ட இடத்தில் இருக்கும் பொருள் அல்ல அது. ஆகவே, அது ஒரு பொருள் அல்ல என்பதை அவன் உணர்ந்து கொண்டவுடனே அவனுடைய தேடலின் அபத்தம் அவனுக்கே வெட்ட வெளிச்சம் ஆகியது. அதுவொரு பொருள் அல்ல என்றால் அதைக் குறித்து ஒன்றும் செய்ய முடியாது. அதுவொரு செயல் என்றால் பின் அச்செயலை செய்யக் கூடாது அவ்வளவுதான்.

அவன் தன் கண்களைத் திறந்தான். போதிதர்மரைப் பார்த்து ''மனம் என்று எதையும் எங்கும் என்னால் காணமுடியவில்லை" என்று சொன்னான்.

இப்போது போதிதர்மர், "அப்படியானால் அதை நீ ஆளுமைப்படுத்தி விட்டாய் என்று அர்த்தம். ஆகவே, நீர் அமைதி குறைந்து இருப்பதாக உணரும்போதெல்லாம் பேசாமல் உள்ளுக்குள் பாரும். அந்த அமைதியின்மை எங்கே இருக்கிறது என்று கண்டுபிடியும். அப்படிக் காண்பதுவே மனத்துக்கு எதிரானது. ஏனெனில், பார்ப்பது என்பது எண்ணுவது ஆகாது. மேலும், கூர்மையாக பார்க்கிறபோது உன் ஆற்றல் முழுவதும் ஒரு பார்வையாகவே ஆகிவிடுறது" என்றார் போதிதர்மர்.

அன்பர்களே! மேற்கண்ட நிகழ்வில் நாம் தெரிந்து கொள்ள வேண்டுவது என்னவெனில், மனம் என்பது நம்முள்தான் உள்ளது. மேலும், அது ஒரு பொருள் அல்ல. அதுவொரு செயல். அதை கவனித்தாலே தானாக அடங்கிவிடும். கவனித்தல் என்பதே அதற்கு எதிரான செயல்.

இதையே வேறுவிதமாகக் காண்போம். ஒருமுறை புத்தர் தன் சீடர்களுடன் பயணப் பட்டுக் கொண்டிருந்தார்.

ஒரு ஏரியை எதிர் கொண்டபோது, அங்கிருந்த பெரிய ஆலமர நிழலில் அனைவரும் சற்று ஓய்வெடுக்கும் எண்ணத்துடன் தங்கினார்கள். புத்தர் தன்னுடைய சீடர்களில் ஒருவரை அனுப்பி ஏரியில் இருந்து குடிப்பதற்கு நீர்கொண்டு வரச் சொன்னார்.

*சீடரும் தன்னிடம் இருந்த பானை ஒன்றை எடுத்துக்கொண்டு நீர்நிலையை நோக்கி நடந்தார்.*

*அதே சமயத்தில் மாட்டு வண்டிக்காரர் ஒருவர் ஏரிக்குள் இறங்கி கடந்து சென்றார். ஏரி கலங்கிவிட்டது. அத்துடன் ஏரியின் கீழ்ப் பகுதியில் இருந்த சேறும் சகதியும் மேலே வந்து நீரை அசுத்தப் படுத்தி பார்ப்பதற்கே உபயோகமற்றதாகக் காட்சியளித்தது. இந்த கலங்கிய நீர் எப்படிக் குடிப்பதற்குப் பயன்படும்? இதை எப்படிக் குருவிற்குக் கொண்டுபோய்க் கொடுப்பது? என்று தண்ணீரில்லாமல் திரும்பிவிட்டார். அத்துடன் தன் குருவிடமும் அதைத் தெரிவித்தார்.*

*ஒரு மணி நேரம் சென்ற பிறகு, புத்தர் தன்னுடைய சீடரை மீண்டும் ஏரிக்குச் சென்றுவரப் பணித்தார்.*

*நீர்நிலையருகே சென்று சீடன் பார்த்தான். இப்போது நீர் தெளிந்திருந்தது. சகதி, நீரின் அடியிற்சென்று பதிந்திருந்தது. ஒரு பானையில் தண்ணீரை முகர்ந்து கொண்டு புத்தரிடம் திரும்பினான்.*

*புத்தர் தண்ணீரைப் பார்த்தார். சீடனையும் பார்த்தார். பிறகு மெல்லிய குரலில், "தண்ணீர் சுத்தமாவதற்கு என்ன செய்தாய்?" எனக் கேட்டார்.*

*அதற்கு சீடன், "நான் ஒன்றும் செய்யவில்லை சுவாமி! அதை அப்படியே விட்டுவிட்டு வந்தேன். அது தானாகவே சுத்தமாயிற்று!" என்றான்.*

*மேலும் புத்தர், "நீ அதை அதன் போக்கிலேயே விட்டதால் அது தானாகவே சுத்தமாயிற்று. அத்துடன் உனக்கு தெளிந்த நீரும் கிடைத்தது இல்லையா?*

*நம் மனமும் அப்படிப்பட்டதுதான். மனம் குழப்பத்தில் இருந்தால் நாம் ஒன்றும் செய்ய வேண்டாம். அதை அப்படியே விட்டுவிட வேண்டும். சிறிது கால அவகாசம் கொடுக்க வேண்டும். அது தனக்குத்தானே சரியாகிவிடும். நாம் எந்தவித முயற்சியும் செய்ய வேண்டாம். மனதை சமாதானப்படுத்தும் விதத்தைப் பற்றி சிந்திக்கவும் வேண்டாம். அது அமைதியாகிவிடும். அது தன்னிச்சையாக நடக்கும். அத்துடன் நம்முடைய முயற்சியின்றி அது நடக்கும். மன அமைதி என்பது இயலாத செயல் அல்ல! இயலும் செயலே! அதற்கு நம் பங்கு எதுவும் தேவை இல்லை!" என்றார்.*

*இக்கருத்தை நம் வள்ளல் பெருமானாரும்* **"பற்று நினைத்தெழும் இப்பாவி மனத் தீமையெல்லாம் உற்று நினைக்கில் எனக்கு ஊடுருவிப் போகுதடா"** *எனப் பாடுகின்றார்.*

இங்கு எண்ணங்கள் உருவாகக் காரணம் ஒரு பொருளின் மீதோ அல்லது நபரின் மீதோ கொண்ட பற்றேயாகும். இவ்விதம் பற்றின் காரணமாக எழும் எண்ணங்களுக்கு செயல் வடிவம் கொடுக்காது அலட்சியம் செய்து உற்று கவனித்தால் அது தானாகவே இல்லாமல் போகின்றது என தன் அனுபவத்தின் மூலம் பெருமானார் நமக்கு அறிவுறுத்துகின்றார்.

மேற்கண்ட இரண்டு நிகழ்வுகளிலும் ஏதோவொரு கலக்கம், மன இருக்கம், குழப்பம் ஏற்படும் சமயங்களில் நாம் என்ன செய்ய வேண்டும் என்பதைப் பற்றிக் கண்டோம். **“வருமுன் காப்பவனே அறிவாளி”** என்ற ஆன்றோர் வாக்கிற்கிணங்க நாம் அனுதினமும் மனதை எவ்வழியில் பழக்க வேண்டும் என்பதை நம் வள்ளல் பெருமானார் வகுத்தருளிய வழிநின்று காண்போம்.

**தேட்டகக் கண்டேர் மொழிப்பாகா உலகில் சிலர்குரங்கை**
**ஆட்டக் கண்டேன் அன்றி அக்குரங்கால் அவர் ஆடச்சற்றும்**
**கேட்டுக் கண்டேன் இலை நான் ஏழை நெஞ்சக் கிழக்குரங்கால்**
**வேட்டுக் கொண்டு ஆடுகின்றேன் இது சான்ற வியப்புடைத்தே.**

என்ற திருஅருட்பாவில் நம் பெருமானார், உலகில் குரங்கை குரங்காட்டி ஆட்டக் கண்டேன் அன்றி அக்குரங்கு அவனை ஆட்டக் கண்டதோ, கேட்டதோ இல்லை. ஆனால், ஏழையாகிய என்னை நெஞ்சமாகிய கிழக்குரங்கு ஆட்டி வைக்கிறதே இறைவா இது வியப்பிற்குரியதே என்கிறார்.

பொதுவாக, மனம் ஒருநிலைப்படாமைக்கு காரணம் நாம் செய்த வினைகளே. இதற்கு தீர்வாக பெருமானார் தாம் எழுதிய திருஅருட்பாவில் “தூய நின் திருவருளின் அன்றி இவ்ஏழை அச்சுழல் மனம் அடக்க வருமோ” என்கின்றார்.

அதாவது, இப்பிரபஞ்ச படைப்புக்கும், தத்துவத் தோற்றத்திற்கும் காரணம் கடவுள். இதன் சூட்சுமம் அவருக்கு மட்டுமே தெரியும். எனவேதான் மேற்சொன்ன வரிகளில் இறைவனது திருவருளை வேண்டிப் பணிகின்றார். ஆக, பலவேறு சாதனைகளில் ஈடுபட்டும் பலன் கிட்டாதோர் இறைவனைச் சரணாகதி அடைந்து அவரது திருவருளைப் பெற்றால் கரங்கெனச் சுழல்கின்ற மனம் அடங்கும்.

மேலே அருளை வேண்டிப் பாடிய நம் பெருமானார் பின்னாளில் அவர் இயற்றிய அருட்பெருஞ்ஜோதி அகவலில் **சுருள்விரிவுடை மனச் சுழல் எலாம் அறுத்தே அருள்ஒளி நிரப்பிய அருட்பெருஞ்ஜோதி** என்கிறார். அதாவது, இறையருளால் அச்சுழல் மனம் அடங்கிற்று என்பதாம்.

நம் வள்ளல் பெருமானாரின் அனுபவத்தின் வழிநின்று நம் வினைகள் நீங்கி மனம் ஒருநிலைப்பட வேண்டுமானால் அவர் வகுத்தருளிய ஜீவகாருண்ய ஒழுக்கத்தில் முதலில் நிற்க வேண்டும்.

"ஜீவகாருண்ய ஒழுக்கமில்லாமல் ஞானம், யோகம், தவம், தியானம், ஜெபம், விரதம் முதலியவைகளைச் செய்கின்றவர்கள் கடவுள் அருளுக்குச் சிறிதும் பாத்திரமாகார்கள். ஜீவகாருண்ய ஒழுக்கமில்லாமல் செய்யப்படுகின்ற செய்கைகள் எல்லாம் பிரயோஜனமில்லாத மாயாஜாலச் செய்கைகளே ஆகும் என்று அறிய வேண்டும்" என்பது நம் வள்ளல் பெருமானாரின் வாக்கு. நாம் அனைவரும் ஜீவகாருண்ய ஒழுக்கத்தைப் பயில்வதோடு

1. மனதை சிற்சபையின் கண்ணே நிறுத்தல்.

2.மனதை துர்விஷயத்தைப் பற்றாதிருக்கச் செய்தல்.

3. பிறர் குற்றம் விசாரியாதிருத்தல்.

4. தன்னை மதியாதிருத்தல்.

5. விறுப்பு வெறுப்புகளை நீக்கி இயற்கையாகிய சத்துவ மயமாய் தயவு வடிவாய் நிற்றல்.

6. தனது தத்துவங்களை அக்கிரமத்தில் செல்லாது கண்டித்தல் என்ற **கரண ஒழுக்கத்தை** கடைபிடித்தல் வேண்டும்.

இத்துடன் பெருமானார் கூறியபடி நித்தியம் ஆறு காலங்களில் மனதை ஒருவழிப்படுத்தி கடவுளை தியானம் செய்து பழக வேண்டும்.

மேற்குரித்த காலங்கள் **சூரிய உதயம்** (6am-8am), **உச்சிப்போது** (11am-1pm), **சாயரக்ஷை** (4pm-6pm), **மாலை** (6pm-8pm), **யாமம்** (11pm-1am), **வைகறை** (4am-6am). இந்த காலங்களில் எல்லாம் வல்ல தலைவனை வணங்குதல் வேண்டும்.

இதற்கு இடைப்பட்ட காலங்களில் இடம் தனித்திருத்தல், இச்சை இன்றி நுகர்தல், தெய்வம் பராவல் (சத்விசாரம்), பிறவுயிர்க்கு இரங்கல், பெருங்குணம் பற்றல், பாடிப்பணிதல், பத்தி செய்திருத்தல் முதலிய நற்செய்கைகளில் பலகால் முயன்று முயன்று பழகிப் பழகி இருத்தல் வேண்டும்.

இவ்விதம் நாம் வாழ்ந்து வந்தால் நித்தம் எண்பது கோடி நினைக்கும் தொழிலை உடைய மனதின் சுழற்சி வேகம் குறைந்து அடங்கி ஒடுங்கி இறைவன் அருளரசு செய்யும் பெருவெளிக்குள் சென்று ஆனந்தமாக வாழலாம்.

திருச்சிற்றம்பலம்

Owned, Published & Edited by S. Mahendrababu
from Vallalar Sathya Dharmasalai, Mountain Roundway,
Thiruvannamalai Tk. & Dt. - 606 603.
and Printed by J. Radha at Subam Printers
39/1, Kosamada Street, Tiruvannamalai - 606 601.

அருட்பெருஞ்ஜோதி அருட்பெருஞ்ஜோதி தனிப்பெருங்கருணை அருட்பெருஞ்ஜோதி



மேற்கு தொடர்ச்சி மலை அடிவாரத்தின் இயற்கை சூழலில்...

# பஞ்ச சுத்தி கிரியா

உடல்உறு பிணியால் உயிர்உடல் கெடாவகை
அடல்உறக் காத்தருள் அருட்பெருஞ்ஜோதி
- அகவல்

"உடல் நலம், மன அமைதி பெற்று ஆரோக்கிய வாழ்வு வாழ மூன்று நாட்கள்"



**இம்முகாமில்...**

- பஞ்ச சுத்தி முறை
- யோகாசனம்
- பிராணாயாமம்
- மௌனம்
- தியானம்
- பக்தி

**போன்றவை நடைபெறும்**

ஜூலை
20, 21, 22
2018

நாள்: ஜூலை **20, 21 & 22** வெள்ளி, சனி, ஞாயிறு
(மூன்று நாட்கள் முழுவதும்)

இடம்: **வள்ளலார் சன்மார்க்க சங்கம்,**
பெருமாள் மலை அடிவாரம், அர்த்தநாரிபாளையம்,
பொள்ளாச்சி.

## பயிற்சியில் கலந்து கொள்ளும் அன்பர்கள் கவனத்திற்கு

1. அன்பர்கள் ஜூலை 19 வியாழன் இரவிற்க்குள் வந்துவிட வேண்டும்.
2. பயிற்சியில் கலந்து கொள்வோர் 18-60 வயதிற்குட்பட்டவராக இருக்க வேண்டும்.
3. யோகாசனம் செய்வதற்கும், படுப்பதற்கும் இரண்டு பெட்ஷீட் மேலும் ஆண்கள்: T.ஷர்ட், ஷார்ட்ஸ் பெண்கள்: சுடிதார் போன்ற ஆடைகளை எடுத்துவரவும். குறிப்பு எடுக்க நோட்டு பேனா எடுத்துவரவும்.

**பஸ் ரூட்:** பொள்ளாச்சியிலிருந்து பஸ் எண்: 16, 27, 58 (கடைசி பஸ் இரவு 9:30க்கு)
உடுமலைபேட்டையிலிருந்து பஸ் எண்: 28, 34 (கடைசி பஸ் இரவு 8:30க்கு)

சைவ உணவாளர்களுக்கு மட்டுமே அனுமதி

40 நபர்களுக்கு மட்டுமே அனுமதி

முன்பதிவிற்கு:
**88385 40176, 89403 96760**

உங்கள் ஆரோக்கியத்திற்கான முதலீடு ரூ. 1,500/-



Vallalar Sanmarga Gnanamurasu, Tamil Monthly June 2018, RNI TNTAM/2007/21626 DRO.R.C./C3/74857/05
PR No.TRL/11/2017-19 Posted at Tiruvannamalai on 16th of every month,
WPP License No. TN/PMG(CCR)/WPP 582/2018-2019
Published on 15th of every month, Printed pages 28 ( including 4 cover pages).

அருட்பெருஞ்ஜோதி அருட்பெருஞ்ஜோதி
தனிப்பெருங்கருணை அருட்பெருஞ்ஜோதி



## வடலூர் மாதப்பூசம்

**13.07.2018** – ஆனி 29 – வெள்ளி

**10.08.2018** – ஆடி 25 – வெள்ளி

**06.09.2018** – ஆவணி 21 – வியாழன்

## திருவண்ணாமலை பௌர்ணமி கிரிவலம்



**27.06.2018** – ஆனி 13 – புதன் காலை 07:46 – மறுநாள் காலை 10:47 வரை

**27.07.2018** – ஆடி 11 – வெள்ளி
முன்தினம் இரவு 11.54pm – மறுநாள் இரவு 1:54am வரை

அனைவரும் அருள் பெற வருக! வருக!!

தொடர்புக்கு: 88385 40176, 63801 11475

அருட்சபை நடம்புரி அருட்பெருஞ்ஜோதி
தெருட்பெருஞ் சீர்சொலத் திகழ்வ சித்தியே.

திரு/திருமதி

Redirect to : அருள்திரு பாபு சாது
சமரச சுத்த சன்மார்க்க சத்திய சங்கம்
552/6A, வாயுலிங்கம் எதிரில், கிரிவலப்பாதை, கோசாலை கிராமம், அடிஅண்ணாமலை (Po),
திருவண்ணாமலை – 606 604. Cell : 94434 89849, 99427 76351

சந்தா பற்றிய விபரங்களுக்கு அணுகவும்: +91 80126 80865